# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 152 · சனிக்கிழமை Saturday · 29.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


## பள்ளிக்குழந்தைகளுடன் ரக்ஷா பந்தன் கொண்டாடிய பிரதமர் மோடி



புதுடில்லி:

டில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் குழந்தைகளுடன் பிரதமர் மோடி ரக்ஷா பந்தன் கொண்டாடி மகிழ்ந்தார்.

சகோதரத்துவத்தை போற்றும் வகையில் நாடு முழுவதும் ரக்ஷா பந்தன் பண்டிகை இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளில், தங்களின் சகோதரர்களுக்கு ராக்கி கயிறை கட்டி பெண்கள் தங்களின் அன்பை பரிமாறிக் கொள்வார்கள். இந்த நாளையொட்டி பிரதமர் மோடி இன்று நாட்டு மக்களுக்கு ரக்ஷா பந்தன் வாழ்த்து தெரிவித்தார். அவரது பதிவு; இத்தகைய புனிதத் திருநாள் உங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியையும், வளத்தையும், வெற்றியையும் கொண்டு சேர்க்கட்டும். அன்பு, பாசம் மற்றும் பரஸ்பர நம்பிக்கைக்கான இந்த பந்தம் என்றும் விலகாமல் என்றென்றும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இதைத்தொடர்ந்து, டில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் குழந்தைகளுடன் பிரதமர் மோடி ரக்ஷா பந்தனை கொண்டாடி மகிழ்ந்தார். பள்ளிக் குழந்தைகள் அவருக்கு ராக்கி கயிறைக் கட்டி அன்பை வெளிப்படுத்தினர். இது தொடர்பான புகைப்படங்களை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பிரதமர் மோடி, மறக்க முடியாத தருணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னை புழல் சிறையில் முதலமைச்சர் விஜய் திடீர் ஆய்வு



சென்னை செங்குன்றம்அருகேபுழல் மத்திய சிறையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

முதல்வர் விஜய் பதவியேற்றது முதல், அவ்வப்போது பல்வேறு அரசு கட்டிடங்கள், விடுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இதன் தொடர்ச்சியாக, சென்னை செங்குன்றம் அருகே புழல் மத்திய சிறையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டார். சுமார் ஒரு மணி நேரம் ஆய்வு செய்ததைத் தொடர்ந்து, M3 காவல் நிலையத்திலும் திடீர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர், காவல் நிலைய ஆவணங்கள் மற்றும் கோப்புகளை ஆய்வு செய்தார்.

இதனிடையே, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலை, வசதிகள் தொடர்பாக நேரில் சென்று முதல்வர்திடீர்விஜய் ஆய்வு மேற்கொண்டார். மேலும், சென்னை சிறையில் கைதிகளுக்குவழங்கப்படும் உணவு, உணவு தயாரிக்கப்படும் கூடம், மருத்துவ வசதிகள் என அனைத்தையும் முதல்வர் நேரில் ஆய்வு நடத்தினார்.

முன்னதாக, மெட்ரோ, திருவள்ளூர் சிப்காட், பெரம்பூர் பேருந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் முதல்வர் நேரில் ஆய்வு மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தில் இருந்து டெல்லி வந்தடைந்த 21 தமிழர்கள்



இமயமலை நாடான நேபாளத்தில் திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை (வெள்ளிக்கிழமை) 469-ஆக உயர்ந்தது; அங்கு மூன்றாவது நாளாகத் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடரும் நிலையில், சுமார் 1,000 பேர் இன்னும் காணாமல் போயுள்ளனர்.

இந்த சூழலில், நேபாளத்துக்கு சென்று மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்க, அமைச்சர்களுக்கு உத்தரவிட்டிருந்த தமிழக முதல்அமைச்சர் விஜய், மீட்கப்பட்டுள்ள 21 தமிழர்களை தாயகம் அழைத்து வர ஏற்பாடு செய்யவும், தொடர்பு கொள்ள இயலாதவர்களின் நிலையைக் கண்டறிந்து மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தவும் அறிவுறுத்தியிருந்தார். இதனிடையே நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கிய, கும்பகோணத்தில் இருந்து கைலாஷ் யாத்திரைக்குச் சென்ற 57 பேரில் இதுவரை பாதுகாப்பாக மீட்கப்பட்ட 21 பேர் இன்று இரவு சென்னைவந்துநாளை அவர்களது சொந்த ஊருக்குசெல்லஇருப்பதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் காத்மண்டுவில் இருந்து மதியம் 2.15 மணிக்கு நேபாளத்தில் இருந்து மீட்கப்பட்ட 21 தமிழர்களுடன் புறப்பட்ட இண்டிகோ விமானம் 3.45க்கு டெல்லி விமான நிலையம் வந்தடைந்தது. அங்கிருந்து இரவு 8 மணிக்கு புறப்படும் அவர்கள் இரவு 10.25 மணிக்குசென்னைக்கு வந்தடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் தனது எக்ஸ் வலை தளத்தில், "நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி மீட்கப்பட்ட, தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 யாத்ரீகர்களை சந்தித்தேன். அவர்களின் அனுபவங்களை நேரில் கேட்டறிந்தது நெகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. இந்த மீட்புப் பணிக்காக நேபாள ராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இந்தியா திரும்புவதை சுமூகமாக ஒருங்கிணைத்த காத்மாண்டுவில் உள்ள இந்தியத் தூதரகத்தின் செயல்பாட்டைப் பாராட்டுகிறேன்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


## திமுகவில் இனி 110 மாவட்டச் செயலாளர்கள் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

திமுகவில் 110 மாவட்டச் செயலாளர்களை நியமிப்பதற்கு வசதியாக தொகுதிகளை பிரித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். 2 தொகுதிகளுக்கு ஒரு மாவட்டச் செயலாளர் வீதம் நியமிக்கப்படுவதாக மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். ஒரு சில மாவட்டச் செயலாளர்கள் மட்டும் 3 தொகுதிகளை கவனிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-



கடந்த 22.8.2026 அன்று நடைபெற்ற திமுக தலைமை செயற்குழுக் கூட்டத்தில் நிர்வாகச் சீரமைப்புக்குத் தேவையான மிகமுக்கியமான முடிவுகளைத் தீர்மானங்க ளாக நிறைவேற்றி இருக்கிறோம். திமுக தொடங்கப்பட்ட நாள் முதல், இதுவரையில் 15 முறை கழக அமைப்புரீதியாகத் தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

இதன் தொடர்ச்சியாக 16-வது கழக அமைப்புத் தேர்தலை நடத்திடவும் - பல்வேறு அமைப்புரீதியாக நிர்வாக மாற்றங்கள்மேற்கொள்ளப்படவும் பல தீர்மா னங்கள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் மிக முக்கியமானது மாவட்டக் கழகங்கள் குறித்த தீர்மானமாகும். இதனையடுத்து, கழக மறுசீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், திமுக முன்னணியினருடன் கலந்தாலோசித்து, தமிழ்நாட்டில் உள்ள தொகுதிகளை 110 மாவட்டங்களாகப் பகுத்து அறிவிக்கிறேன். அதில், அதிகமான மக்கள் தொகை இருப்பதன் காரணமாகச் சோழிங்கநல்லூர் தொகுதி மட்டும் தனி மாவட்டமாக அறிவிக்கப்படுகிறது. அறிவிக்கப்பட்டுள்ள இந்த 110 மாவட்டக் கழகங்களில் தற்போதுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில் மாவட்டச் செயற்குழுவைக் கூட்டி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள நகர கழக மாவட்டங்களின் அடிப்படையில், ன்றிய - பகுதி - பேரூர் - வட்ட கிளை அமைப்புகளைப் பிரிப்பதற்கான பரிந்துரைகளை 15 நாட்களுக்குள் வழங்கிட வேண்டும் என்றும், தலைமைச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், கழக மறுசீரமைப்புக்குழு மூலம் வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, கழக அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும்

கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள

## செயின்ட் ஜோசப் பள்ளியில், பற்களால் மினி பஸ்சை இழுத்து உலக சாதனை படைத்த பள்ளி மாணவன்!

### சாதனை பக்கத்தில் இடம் பிடித்தார்



கோவை ஒண்டிப்புதூரில் உள்ள புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் கராத்தேமாணவர்பிரதியுமன் (வயது 15), சுமார் 3,500 கிலோ (3.5 டன்) எடை கொண்ட நான்கு சக்கர வாகனத்தை (மினி பஸ் ) தனது பற்களால் கயிறு கட்டி இழுத்து பிரம்மாண்ட சாதனை படைத்தார்.

இவரது இந்த அசாத்திய முயற்சி சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டு 'புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ்' சாதனைப் புத்தகத்தில் அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சாதனை படைத்த மாணவனுக்கு அதற்கான உலக சாதனை சான்றிதழும் பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பள்ளியின் தாளாளர் மற்றும் முதல்வர் அருட்தந்தை கிருபாகரநாதன், கராத்தே பயிற்சியாளர்கள் சிரில் வினோத், கோகுலகிருஷ்ணன் உள்ளிட்டோர் மாணவன் பிரதியுமனை நேரில் பாராட்டி வாழ்த்தினர் இந்தசம்பவம்அனைத்து பள்ளிமாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதுடன், பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் பிரதியுமனுக்கு வாழ்த்தி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

### கோவை செல்வபுரம் பகுதியில், அன்னை மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பாக

## அன்னை மதர் தெரசாவின் 116வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம் நடைபெற்றது

### மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது



கோவை மாவட்டத்தில், அன்னை மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் என்ற அமைப்பு செயல்பட்டு வருகின்றது. இந்த அமைப்பின் சார்பாக, கோவை செல்வபுரம் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் அன்னை மதர் தெரசா 116 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடபட்டது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை தேசிய ஒருங்கிணைப்பாளர் டென்ஸ்டன் ராஜா சிறப்பவிருந்தினராக கலந்து கொண்டார், அன்னை மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் மாவட்ட தலைவர் அருள் தாஸ் தலைமை தாங்கினார், தொடர்ந்து அன்னை மதர் தெரசாவின் வாழ்க்கை வரலாறு, அவர் சந்தித்த துயரங்கள், அவர் மக்களுக்கு ஆற்றிய தொண்டுகள், குறித்து விளக்க உரையாற்றினர். இதனை தொடர்ந்து ஏழை எளிய மக்கள், சுமார் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு தொழில் வளர்ச்சிக்காக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளராக அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூகஆர்வலரும், வழக்கறிஞருமான புஸ்பானந்தம் கலந்து கொண்டு சட்ட விழிப்புணர்வுகளை, ஏழை எளிய மக்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் மத்திய, மாநில அரசால் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் குறித்தும், அதனை பெறுவது எவ்வாறு என்பது குறித்தும் நீதிமன்றத்தை ஏழை எளிய மக்கள் அணுகுவது எவ்வாறு என்பது குறித்தும் விளக்கமாக பொதுமக்களுக்கு அவர் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சென்னை காவியா,

வில்லியம் ஜெயக்குமார், அனுப் ஆண்டனி, பிரமிளா, நந்தகுமார், பிரேம்குமார், நந்தகுமாரன், தெய்வானை, மாலதி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை சாய்பாபாகாலனி பகுதியில் உள்ள ஆனைமலைஸ் டொயோட்டா ஷோரூமில் புதிய டொயோட்டா ஹைலக்ஸ் அறிமுகம் செய்யப்பட்டது




கோவை சாய்பாபாகாலனி பகுதியில் உள்ள ஆனைமலைஸ் டொயோட்டா ஷோரூமில், டொயோட்டா நிறுவனத்தின் புதிய தலைமுறை ஹைலக்ஸ் வாகனம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆனைமலைஸ் டொயோட்டா நிர்வாக அதிகாரிகள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வாகன ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

புதிய டொயோட்டா ஹைலக்ஸ் வாகனத்தின் செயல்திறன் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்து ஆனைமலைஸ் டொயோட்டா அதிகாரிகள் பேசுகையில்,

2.8 லிட்டர் பிஎஸ்6 பேஸ்-2 டீசல் என்ஜின் பொருத்தப்பட்டுள்ள இந்த வாகனம், அதிகபட்சமாக 204 பிஎஸ் சக்தியையும், 500 என்.எம் டார்க்கையும் வழங்குகிறது. 6 வேக தானியங்கி கியர்பாக்ஸ் மற்றும் 80 லிட்டர் எரிபொருள் டேங்க் இடம்பெற்றுள்ளது. புதிய ஹைலக்ஸின் முக்கிய சிறப்பம்சமாக 4x4 இயக்க வசதியுடன், எலக்ட்ரானிக் டிஃபரன்ஷியல் லாக், டவுன்ஹில் அசிஸ்ட் கன்ட்ரோல் மற்றும் மல்டி டெர்ரெயின் செலக்ட் உள்ளிட்ட வசதிகள், சவாலான சாலைகள் மற்றும் ஆஃப்ரோடு பயணங்களிலும் சிறப்பான செயல்திறனை வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புற வடிவமைப்பில் புதிய கிரில், எல்இடி ஹெட்லேம்ப்கள், டேடைம் ரன்னிங் லைட்கள், எல்இடி பனி விளக்குகள், அலாய் சக்கரங்கள் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன..

உட்புறத்தில் 12.3 அங்குல தொடுதிரை தகவல்-வயர்லெஸ் ஆப்பிள் கார்ப்ளே மற்றும் ஆண்ட்ராய்டு ஆட்டோ, டொயோட்டா ஐ-கனெக்ட், டிஎஃப்டி தகவல் திரை, வயர்லெஸ் சார்ஜிங் உள்ளிட்ட நவீன வசதிகள் இடம்பெற்றுள்ளன.

பாதுகாப்பு அம்சங்களிலும் புதிய ஹைலக்ஸ் கவனம் பெற்றுள்ளது. 7 ஏர்பேக்குகள், வாகன நிலைத்தன்மை கட்டுப்பாடு, ஏபிஎஸ், பிரேக் அசிஸ்ட், ஐஎஸ்ஓஃபிக்ஸ், டயர் பிரஷர் கண்காணிப்பு, முன் மற்றும் பின்புற பார்க்கிங் சென்சார்கள், பனோரமிக் வியூ மானிட்டர் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்..

புதிய ஹைலக்ஸ், வாகனத்தை வாங்க ஆர்வமுள்ளவர்கள் ஆனைமலைஸ் டொயோட்டா ஷோரூமிற்கு வருகை தந்து ஹைலக்ஸ் காரை டெஸ்ட் டிரைவ் செய்து பார்க்கலாம் என ஆனைமலைஸ் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.



### கோவை சின்னியம்பாளையம் பகுதியில்

## மிக பிரமாண்டமான மீன்கள் கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு அரங்கம் துவக்க விழா நிகழ்ச்சி

### சூலூர் சட்டமன்ற உறுப்பினர் சுகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

கோவை அவினாசி சாலை சின்னியம்பாளையம் பகுதியில் உள்ள, கோகுலம்பார்க்ஹோட்டல் எதிரே "கோயமுத்தூர் அக்வா பார்க்" என்ற பெயரில் தமிழகத்திலேயே இரண்டாவது மிகப்பெரிய மீன்கள் கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு அரங்கம் இன்று துவங்கப்பட்டுள்ளது இதனை கோவை சூலூர் சட்ட மன்ற உறுப்பினர் சுகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தும், இங்குள்ள மீன்களையும் கண்டு ரசித்தார்.

மேலும் இது குறித்து இந்த மீன்கள் கண்காட்சி அரங்கின் உரிமையாளர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது.. இந்த மீன்கள் கண்காட்சி அரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட கடல் மீன்கள் மற்றும் டேம் மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. ஒரு கிராம் அளவில் மிக சிறிய மீன்கள் முதல் 40 கிலோ மிகப்பெரிய மீன்கள் வகை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்தனர். மேலும் பொழுதுபோக்கு அம்சங்களாக கைகளில் அமரும் பறவைகள், நெருப்புக்கோழிகளும் இந்த அரங்கில் இடம் பெற்றுள்ளன. நமது கோவை மாநகரில் இதுவரை சில குறிப்பிட்ட இடங்கள் மட்டுமே பொழுதுபோக்கு அம்சங்களாக இருந்து வருகிறது. தற்பொழுது "கோயம்புத்தூர் அக்வா பார்க்" மீன் கண்காட்சி அரங்கம் நமது கோவையின் அடையாளங்களுள் ஒன்றாக திகழப்போ கிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கண்டு ரசிக்கும் இடமாக இந்த "கோயம்புத்தூர் அக்வா பார்க்" மீன்கள் கண்காட்சி அரங்கம் அமைந்துள்ளது. இந்த கண்காட்சி அரங்கை காண பொதுமக்கள் காலை 10 மணி முதல் மாலை 6:00 மணி வரை வரலாம் என்றும், குழந்தை களுக்கு ரூபாய் 200 மற்றும் பெரியவர்களுக்கு ரூபாய் 300 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் இந்த கண்காட்சி அரங்கிலேயே உணவுக் கூடம், தாய்மார்கள் பாலூட்டும் அறை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் இடம் பெற்றுள்ளது. இந்த கண்காட்சி வளாகம் முழுவதும் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது, இனிமேல் "கோயமுத்தூர் அக்வா பார்க்" மீன்கள் கண்காட்சி வளாகம் நமது கோவை மக்களின் விடுமுறை தினங்களை இனிமையாக மாற்றும் என்பதில் சந்தேகம் இல்லை. வந்து பாருங்கள், கண்டு மகிழுங்கள் என தெரிவித்தனர்

## கோவையில் கோலாகலமாக துவங்கியது பிஎஸ்ஜி கோப்பை: ஆண்கள் மற்றும் முதலாம் ஆண்டு பெண்கள் பங்கேற்கும் அகில இந்திய கூடைப்பந்து போட்டிகள்

### ஆகஸ்ட் 30ம் தேதி வரை 5 நாட்கள் நடைபெறுகின்றது



கோவையில் பிஎஸ்ஜி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பாக 60-வது அகில இந்திய கூடைப்பந்து போட்டிகள் இன்று துவங்கியது.

60-ஆவது ஆண்டை நினைவு கூறும் வகையில் இந்த ஆண்டு முதல் பெண்களுக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டியும் நடத்தப்படுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெறும் ஆண்கள் அணிக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/- மற்றும் சுழல் கோப்பையும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ரூபாய் 75,000/- மற்றும் கோப்பையும், மூன்றாம் இடத்தை பெறும் அணிக்கு ரூபாய் 40,000/-, நான்காம் இடம் பெறும் அணிக்கு ரூபாய் 30,000/- மற்றும் சிறந்த விளையாட்டு வீரருக்கு ரூபாய் 10,000/- வழங்கபட உள்ளது

பெண்களுக்கான போட்டியில் முதல் பரிசு ரூபாய் 75,000/- மற்றும் சுழல் கோப்பையும், இரண்டாம் பரிசு ரூபாய் 50,000/- மற்றும் கோப்பையும், மூன்றாம் மற்றும் நான்காம் இடம் பெறும் அணிக்கு தலா ரூபாய் 25,000/- மற்றும் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கு சுள.10,000/- என மொத்தம் ரூபாய் 4,35,000/- பரிசு தொகையாக வழங்கப்பட உள்ளது இதனை, பாரத ஸ்டேட் வங்கியின் கோவைமண்டலமேலாளர் காயத்ரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளை துவங்கி வைத்தார்.

30-ஆம் தேதி நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவிற்கு பிஎஸ்ஜி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் கோபால கிருஷ்ணன் தலைமையில் இந்திய கூடைப்பந்து சம்மேளனத்தின் தலைவரும், தமிழ்நாடு கூடைப்பந்து கழகத்தின் தலைவரும், தமிழ்நாடுஅரசுபொதுப்பணி துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் அமைச்சருமான ஆதாவ் அர்ஜுனா சிறப்பு விருந்தினராகவும், சக்தி நிறுவனங்களின் தலைவர் முனைவர் எம். மாணிக்கம் அவர்களும், சிஆர்ஐ பம்ப்ஸ் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனரும் கோவை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் தலைவருமான செல்வராஜ் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்ள உள்ளார்கள்.

### கழுகுமலையில்

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு வீ த லீடர்ஸ் இயக்கத்தின் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா



கழுகுமலையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு வீ த லீடர்ஸ் இயக்கத்தின் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

கழுகுமலை குமரேசன் நகர் பகுதியில் நடந்த நிகழ்ச்சிக்கு வீ த லீடர்ஸ் சார்பில் தலைவர்கள் மாரியப்பன், ஜெகதீஷ், சீனிவாசன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

வழக்கறிஞர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். தொடர்ந்து நிர்வாகிகள் அப்பகுதியில் ஏராளமான மரக்கன்றுகளை நட்டு வைத்து இனிப்புகள் வழங்கினர்.

இதில் நிர்வாகிகள் மாரி கார்த்தி, ராமச்சந்திரன், மணி, செல்வம், காளிராஜ், கண்ணாயிரம், முருகன் உள்படபலர் கலந்து கொண்டனர்

### வடக்கன்குளம் ஜாய் பல்கலைக்கழகத்தில் ஓணம் கொண்டாட்டம்

# முதலாம் ஆண்டு மாணவர்களின் அறிமுக நிறைவு விழா

## பல்கலைக்கழக வேந்தர் எஸ்.ஏ. ஜாய் ராஜா தலைமை தாங்கினார்



திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளம்ஜாய்பல்கலைக்கழகத்தில்ஓணம்பெருவிழா மற்றும்முதலாம்ஆண்டு மாணவர்கள் அறிமுக விழா நிறைவு நாள் நிகழ்ச்சி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது . இதில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து கலாசார ஒற்றுமையை வெளிப்படுத்தினர். விழாவில் நடைபெற்ற பூக்கோலம்,ஓணம்கலை நடனம்,ஓணம் ஆடை அணிவடிவமைப்பு அணிவகுப்பு, திருவாதிரை நடனம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது அதில் வெற்றிபெற்றமாணவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பல்வேறு வேடமணிந்த ஊர்வலம் மற்றும் விஜய் தொலைக்காட்சியின் சூப்பர்சிங்கரில்பிரபல இசை புகழ் பிரியா ஜெர்சன் பாடல் குழுவினர்களில் ஓணம் இசைக்கச்சேரியால் அனைவரையும் உற்சாகப்படுத்தினர்.ஓணம். பண்டிகை மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்களின் அறிமுக நிறைவு விழா நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக வேந்தர் எஸ்.ஏ.ஜாய் ராஜா தலைமை தாங்கினார். அவர் பல்கலைக்கழகத்தின் நவீன ஆராய்ச்சி மையங்கள், அறிவியல் செய்முறைக் கூடங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுப் படிப்புகள் குறித்து உரையாற்றினார். மாணவர்கள் இது போன்ற நிகழ்வுகளில் பங்கேற்று தங்களது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். அத்தோடு, முதலாம் ஆண்டு மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றும் கூறினார் இந்நிகழ்ச்சியினை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்தவர்களுக்கும்வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

இவ்விழா ஏற்பாடுகளைத் துணைவேந்தர், முனைவர். வைபவ் மேஷ்ரம், பதிவாளர், ரோனத் உசேன் புலத்தலைவர்கள்,முனைவர் சண்முக நாதன் மற்றும் பல்வேறு துறை முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள், தன்னார்வ மாணவக் குழுவினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



### கோவை பாலக்காடு சாலை நவக்கரையில் அமைந்துள்ள

# ஈஷா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், கேரள மாநிலத்தின் பாரம்பரிய ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது

ஓணம் பண்டிகை முடிந்த நிலையில், முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் விதமாக தற்போது ஓணம் விழா கொண்டாடப்பட்டதாககல்லூரிநிர்வாகம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தின் பாரம்பரிய பண்டிகையான ஓணம் 26ம் தேதி கோலகலமாக கொண்டாடப்பட்டது.

கோவை மாவட்டம் கேரளமாநிலத்தை ஒட்டி அமைந்துள்ள நிலையில், இங்குள்ள கல்வி நிறுவனங்கள் சார்பில் கடந்த ஒரு வாரமாகவே ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது.

இதனிடையே கேரளத்தை ஒட்டியுள்ள ஈசா கல்லூரியில் இன்று ஓணம் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பொறியியல் கல்லூரி என்பதால் முதலாமாண்டு மாணவர்கள் தற்போது தான் வந்துள்ள நிலையில், அவர்களை வரவேற்கும் விதமாக இன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் ஈஷா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி செயலர் டி.ஈ. அஜித், தாளாளர் டி.ஈ. ஆதர்ஷ், தலைமை வகித்து விழாவைத் தொடங்கி வைக்க, ஓணம் பண்டிகை கொண்டாட்டம் கல்லூரி வளாகத்தில் களைக்கட்டியது.

மாணவ, மாணவிகள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உடையணிந்து கல்லூரிக்கு வந்திருந்தனர்.

அப்போது மகாபலி மன்னரைப் போல் வேடமணிந்திருந்த மாணவர் செண்டை மேளம் முழங்க அழைத்து வரப்பட்டார். மாணவிகள், பேராசிரியைகள் கல்லூரி வளாகத்தில் இட்டிருந்த அழகியப் பூக்கோலத்தைப் பார்த்து மகிழ்ந்ததுடன்,மாணவிகளின்திருவாதிரைக்களி நடனத்தைக் கண்டு ரசித்த நிகழ்வு, ஓணம் பண்டிகையின் புராண நிகழ்வை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தியது.

மகாபலி மன்னரைப் போல் வேடமணிந்திருந்த மாணவருடன் மாணவர்கள் குழு புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

அதைத்தொடர்ந்து அனைவருக்கும் கேரளாவின் பாரம்பரிய சுவைமிக்க பாயாசம் வழங்கி, ஒருவருக்கொருவர் தங்களது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர். பின்னர், அனைவருக்கும் ஓணம் சத்யாவிருந்துபரிமாறப்பட்டது. அதைத்தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கண்கவர் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனால் ஈசா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகமே விழாக்கோலத்தில் காட்சியளித்தது.மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள், ஊழியர்கள் காலை முதல் மாலை வரை ஓணம் பண்டிகை கொண்டாடி மகிழ்ந்தனர்.

# நேபாள பேரழிவில் உயிரிழந்தோருக்கு மோட்ச தீபம் ஏற்றி இந்து மக்கள் கட்சியினர் அஞ்சலி

நேபாளத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவில் உயிரிழந்த மக்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டி, இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அருகே பத்மாபுரம் கிராமத்தில் உள்ள அருள்மிகு பெருமாள் திருக்கோவிலில் மோட்ச தீபம் ஏற்றிசிறப்புபிரார்த்தனை நடைபெற்றது.

10.30 மணியளவில் நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில்,பேரழிவில்உயிரிழந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும், உயிரிழந்தோரின் ஆன்மா நற்கதி அடையவும், அவர்களது குடும்பத்தினருக்கு மனவலிமை கிடைக்கவும் இறைவனை வேண்டி சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.



நிகழ்ச்சிக்கு இந்து மக்கள் கட்சியின் வேலூர்கோட்டத்தலைவர் எஸ்.கே. மோகன் தலைமை தாங்கினார்.

இதில் கிளை கௌரவத் தலைவர் முருகன், கிளைத் தலைவர் பாஸ்கர், கிளை பொதுச் செயலாளர் அன்பு, கிளை பொறுப்பாளர் சின்னப்பாமற்றும்கட்சியின் நிர்வாகிகள்,உறுப்பினர்கள் கலந்து கொண்டு மோட்ச தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அப்போது பேசிய நிர்வாகிகள், நேபாளத்தில் ஏற்பட்ட பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய மற்றும் மாநிலஅரசுகள்தேவையான நிவாரண உதவிகளை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், பேரழிவால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம்மற்றும்மறுவாழ்வு உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்து மக்கள் கட்சி தமிழகம்சார்பில்கோரிக்கை விடுக்கப்பட்டது.

# கடையம் ஒன்றியம் வெங்கடாம்பட்டியில் கண்டெடுத்த தங்க கம்மலை உரியவரிடம் ஒப்படைத்த சிறுமி தீபிகா

## நேரில் சென்று முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவபத்மநாதன் பாராட்டினார்

கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்கடாம்பட்டி சுடலைமாடசாமி திருக்கோவிலின் திருவிழாவின்போது கீழே கிடந்த கம்மலை வெங்கடாம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு பயின்று வரும் திரவியக்கனி ஜெயந்தி ஆகியோரின் மகள் தீபிகா அவர்கள் எடுத்துள்ளார்கள் அதனை உரியவரை கண்டுபிடித்து உரியவரான ராஜசேகர் என்பவரின் மகளான துர்கா என்பவரின் கம்மல் என்பதை தெரிந்து அவர்களிடம் ஒப்படைத்துள்ளார்

வெங்கடாம்பட்டியில் டிரஸ்ட் வைத்து பல நூறு மாணவர்களுக்கு இலவசமாக கல்வி கற்றுக் கொடுக்கிற மதிப்பிற்குரிய திருமாறன் அவர்கள் பாராட்டி உள்ளார்கள்

அந்த செய்தி அறிந்து இன்று நான் அந்தக் குழந்தையின் இல்லத்திற்குமுன்னாள்மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் சென்று அந்தக் குழந்தையை பாராட்டி பொன்



னாடை அணிவித்து ஊக்கத் தொகையும் வழங்கி சிறப்பித்து ள்ளார் பொதுவாக கிராமப்புறங்களில் தெருவில் கிடைக்கிற பொருட்களை எடுத்தால் அதனை தங்களுடைய வீட்டுக்கு கொண்டு வருவது தான் வழக்கமாக இருக்கிற நிலையில் தீபிகா என்கிற குழந்தை எடுத்த தங்க கம்மல் ராஜசேகரின் மகள் துர்காவின் கம்மல் என்பது அறிந்து அவரிடம் ஒப்படைத்துள்ளார்

ராஜசேகர் அவர்களும் டிரஸ்ட் வெங்கடம் பட்டி திருமாறன் அவர்களும் அந்த குழந்தையை பாராட்டிய நிலையில் மாவட்ட முன்னாள் செயலாளர்சிவ பத்மநாதன் அவர்கள் தீபிகா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அந்த குழந்தையை வாழ்த்தியிருக்கிறார்கள்

நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் மகேஷ் மாயவன் ஒன்றிய அவைத்தலைவர் ஆ. ரவி மாவட்ட பிரதிநிதி ச.ரவி சுப்பிரமணியன் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர் தங்கத்தாய் கிளைச் செயலாளர் முத்து நாடார் திரவியம், கே. எஸ்.மணி,ராஜா,சேர்மக் கனி, மாரியம்மாள், லிங்கேஸ்வரி,ராஜமாணிக்கம், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டார்கள் நிகழ்ச்சியில்கலந்து கொண்ட எல்லோரும் குழந்தை துர்கா அவர்களின் நேர்மையே பாராட்டி மகிழ்ந்தார்கள்

# மேகமலை விவகாரத்தை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்ல உள்ளோம்

## காங்கிரஸ் கட்சியின் மாநில எஸ்சி பிரிவு தலைவர் ரஞ்சன் குமார் பேட்டி

தேனி மாவட்டம் மேகமலை, வருசநாடு உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை கண்டித்து தேனியில் காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது தேனி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு மாநில காங்கிரஸ் எஸ்.சி பிரிவின் தலைவர் எம்.பி ரஞ்சன் குமார் கலந்து கொண்டார்

மேகமலை வருஷநாடு உள்ளிட்ட மலை கிராம மக்களை வெளியேற்றுவதை கண்டித்து கூட்டத்தில் கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய காங்கிரஸ் எஸ்.சி பிரிவில் மாநிலத் தலைவர் ரஞ்சன் குமார் கூறுகையில்

வருசநாடு, மேகமலையில் பல தலைமுறைகளாக வசித்து வரும் பழங்குடியின மக்கள் வெளியேற்றத்தை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி வருகிறோம்.

மேலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மறுசீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என தமிழக அரசையும், மத்திய அரசையும் வலியுறுத்துகிறோம்

நான்கு தலைமுறைகளாக வசித்து வரும் மலைவாழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது கண்டனத்துக்குரிய செயல் என்று தெரிவித்த அவர் மேகமலை விவகாரத்தை காங்கிரஸ் சார்பில் பாராளுமன்றத்தில் எடுத்துச் செல்ல உள்ளோம், இந்த மக்களின் குரலாக பாராளுமன்றத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பேசுவார் என தெரிவித்தார்



தலைமை– SC/ST துறை மாவட்ட தலைவர் இனியவன், முன்னிலை SC/ST மாநில பொதுச்செயலாளர் முத்துராமன் சிறப்பு அழைப்பாளர்கள் – SC/ST துறைமாநிலதலைவர் M.P.ரஞ்சன் குமார்,தேனி மாவட்ட முன்னாள் காங்கிரஸ் மாவட்ட தலைவர்M.P.முருகேசன், மாநில மருத்துவர் அணி தலைவர் NRTR. தியாகராஜன், இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் ராஜா முஹம்மது, ஊடகப்பிரிவு மாநிலச் செயலாளர் ராஜேந்திர பிரபு, இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கதிர், மாணவர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் ரேவன் சித்தார்த், முனியாண்டி,ஜீவா,கனகசீதா முரளி,முத்துவேல்,சிறுபான்மை பிரிவு தலைவர் பீட்டர் மேகமலை வருசநாடு மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தென்காசிமாவட்டம்,செங்கோட்டைஒன்றியம்,K.P.வலசையில்தேவேந்திரபேனாக்கள்இயக்கத்தின்செங்கோட்டை ஒன்றியதுணைசெயலாளர்திரு.M.மணிஅவர்கள்புதிதாககட்டியுள்ளவீட்டின்கிரஹப்பிரவேசவிழா2382026ல்சிறப்பாக நடந்தது.இவ்விழாவில்தேவேந்திரபேனாக்கள்இயக்கதலைவர்,பச்சைத்தேவேந்திர்,வழக்கறிஞர்திரு. T.C.பாலசுந்தரம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து வாழ்த்தி அன்பளிப்புகள் வழங்கினார். இளைஞரணியினர் தலைவர் அவர்களை வரவேற்று மாலை அனிவித்து மரியாதை செய்தனர்.உடன் செங்கோட்டை ஒன்றிய இளைஞரணி செயலாளர் மாரிச்செல்வம் மற்றும் இளைஞரணி யினர்கள் கலந்து கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் திறப்பு விழா




செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள தொழுப்பேடு ஊராட்சியில்பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வழங்க கோரிபொதுமக்கள் கோரிக்கை வைத்தனர் அதன் பேரில் தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் 25 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்கப்பட்டது இந்த நிலையத்தினை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறக்கும் நிகழ்ச்சியினை தொழுப்பேடு ஊராட்சி மன்ற தலைவர் பொன் சிவலிங்கம், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் புருஷோத்தமன், ஊராட்சிவார்டு உறுப்பினர் சிரஞ்சீவி,ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தனியார் தொழிற்சாலையின் சமூக நல பொறுப்பாளர் பார்த்தசாரதி, இந்திரா பிரியதர்ஷினி, மற்றும் வாட்டர் லைஃப் இந்தியா பிரைவேட் லிமிடெட் இவர்கள் கலந்து கொண்டு சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றிவைத்துபொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தனர். பொதுமக்கள் ஆர்வத்துடன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பிடித்து கொண்டு சென்றனர். இந்த நிகழ்ச்சியில் ஊராட்சிவார்டு உறுப்பினர்கள் சங்கர், கங்கா மணி, மாலதி ரமேஷ், புனிதா சிவலிங்கம் மற்றும் ஊர் பொதுமக்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.

## நாகர்கோவில் வைத்தியநாதபுரம் பீச்ரோடு பகுதியை சார்ந்த சமூக சேவகர் மற்றும் தவெக பிரமுகருமான ஆர்.எஸ்.ராஜன் விடுத்துள்ள அறிக்கை:



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வைத்தியநாதபுரம் சிஎஸ்ஐ தேவாலயம் முன்பு மேற்கூறையுடன் பல ஆண்டுகளாக இருந்து வந்த பேருந்து நிறுத்தம் (அதாவது பஸ் ஸ்டாப்)இடநெருக்கடியை காரணம் காட்டிதிடீரென இரவோடு இரவாக நாகர்கோவில் மாநகராட்சி மூலம் பேருந்து நிறுத்தம் அகற்ற பட்டுள்ளது. மேலும் இப்பேருந்து நிறுத்தம் மூலம் இதனை சுற்றியுள்ள பீச்ரோடு,வைத்தியநாதபுரம்,பெரியவிளை,வட்டவிளை,வடலிவிளைவயல் தெரு, பாவலர் காலணி, இந்து கல்லூரி போன்ற பகுதிகளில் இருந்து வரும் பொது மக்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் இப் பேருந்து நிறுத்தம் வந்து தான் பல்வேறு ஊர்களுக்கு செல்லமுடியும் தற்போது பேருந்து நிறுத்தம் அகற்ற பட்ட காரணத்தால் மழை காலத்தில்எந்த ஒரு இடத்திலும் ஒதுங்கி நிற்க முடியாது இதனால் காலை வேளையில் பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவிகள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகிறார்கள் ஏனென்றால் மழையினால் அவர்கள் கொண்டு வரும் புத்தகங்கள் நனைவதை பாதுகாக்கவே படாதபாடு படவேண்டி இருக்கிறது. மேலும் தினந்தோறும் பேருந்து ஏறுவதற்கு மதிய வேளைகளில் வருபவர்கள் அந்த பகுதியில் எங்கும் ஒதுங்கி நிற்க முடியாது அதனால் பொது மக்கள் மற்றும் முதியவர்கள், சின்ன சிறு பிள்ளைகள் வெயிலின் தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு மிகவும் சோர்வு அடைந்து தலை சுற்றி கீழே தரையில் அமர்வது அன்றாடம் வாடிக்கையாக தினந்தோறும்நடைபெற்று வருகிறது.எனவே பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் கோட்டாறு வைத்தியநாதபுரம் வழியாக பீச்ரோடு செல்லும் சாலையில் இடம் நெருக்கடி இல்லாத ஒரு இடத்தில் பேருந்து நிறுத்தத்தை மீண்டும் பொது மக்கள் நலன் கருதி உடனடியாக அமைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## அவசர தேவைகளுக்கு தேவைப்படும் உதிரத்தை உடனுக்குடன் பெரும் வகையிலும், உதிரம் கொடுக்கவும், உதரம் பெறவும் வகையில், உதிரம் எனும் செயலி வெளியீட்டு விழா நிகழ்ச்சி



விபத்துமற்றும்அறுவை சிகிச்சைகளுக்கு ரத்த தேவை என்பது மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது. அத்தகைய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல், சில நேரங்களில் பல்வேறு நோயாளிகளின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை இருந்து வருவதுடன், பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வரும் நிலையாக உள்ளது. இந்த நிலையை போக்கவும், உதிரம் என்பது உடனுக்குடன் கிடைக்கவும், கோவையில் உதிரம் எனும் செயலி வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேலஞ்சர் துரை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்த செயலியை துவக்கி வைத்தார். மேலும் காமாட்சிபுரி ஆதீனம் இரண்டாம் குருமகா சன்னிதானம் ஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர ஸ்வாமிகள் இதனை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சிம்ட்டா குரூப் நிர்வாக இயக்குனர் சம்பத்குமார், கருமத்தம்பட்டி ரோட்டரி கிளப் தலைவர் துளிர் மோகன்ராஜ், வள்ளியம்மாள் அறக்கட்டளை நிறுவனர் வள்ளியம்மாள், இயற்கை அறக்கட்டளை சிதம்பரம், கேர் அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் பிரியதர்ஷனி விமல்ராஜ், உதிரம் சேவா அறக்கட்டளை அங்கு ராஜ், சிவகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய உதிரம் செயலி ஒருங்கினைப்பாளர்கள் கூறியதாவது..

நீண்ட நாட்களாகவே இரத்ததானம் என்பது பொதுமக்களுக்கு இன்றியமையாத ஒரு தேவையாக இருந்து வருகின்றது. பல்வேறு குருதிக்கொடையாளர்கள் தங்களது ரத்தத்தை தானமாக வழங்க முன் வந்தாலும், குறிப்பிட்ட ஒரு சில வகை, ரத்தங்கள் ஒரு சில அறுவை சிகிச்சை மற்றும் அவசர தேவைகளுக்கு கிடைப்பதில்லை. அத்தகைய நிலையை கணக்கில் கொண்டு, அவற்றை தீர்வு காணும் வகையில் இந்த செயலி அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒருவரின் இரத்த தேவையை அறிந்து உடனுக்குடன், அவர்களுக்கான ரத்தத்தை வழங்க முடியும், இரத்த தானமும் பெற முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர்

## கோவை விமான நிலையம் அருகே, லோட்டஸ் ஆப்டிக் புதிய கிளையின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது

### தமிழ்நாடு மாநில இந்திய மருத்துவ சங்கத்தின் தலைவர் ஏ.கே. ரவிக்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



லோட்டஸ் கண் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில்,பொதுமக்களுக்கு தரமான கண் சிகிச்சை மற்றும் கண் கண்ணாடி அணிகலன்கள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் 'லோட்டஸ்ஆப்டிக்'என்ற புதிய பிரிவு கோயம்புத்தூர்அவிநாசிசாலையில் உள்ள சித்ரா பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய கிளை திறப்பு விழாவில் தமிழ்நாடு மாநில இந்திய மருத்துவ சங்கத்தின் தலைவர் ஏ.கே. ரவிக்குமார்,இந்திய மருத்துவ சங்கத்தின் செயலாளர் எஸ்.கார்த்திக் பிரபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

லோட்டஸ் கண் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சிநிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சங்கீதா சுந்தரமூர்த்தி ,இயக்குநர் கே.எஸ். ராமலிங்கம் உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். லோட்டஸ் ஆப்டிக் மூலம் கண் பரிசோதனை,பார்வைக் குறைபாடுகளுக்கான தீர்வுகள் மற்றும் நவீன கண் கண்ணாடி அணிகலன்கள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 30 2026 வரை நிறுவன முத்திரை கொண்ட கண்ணாடி சட்டகங்களுக்கு 50 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுவதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. லோட்டஸ் கண் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் கண்புரை அறுவை சிகிச்சை, பார்வைத் திருத்த அறுவை சிகிச்சை,விழித்திரை, கண் அழுத்த நோய் மற்றும் கருவிழி உள்ளிட்ட பல்வேறு கண் மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என தெரிவித்துள்ளனர்.



வீதலீடர்ஸ்அமைப்புசார்பாகநேற்று(28.8.2026)ஈரோடு மாவட்டம்சடையம்பாளையம்குளம்அருகிலும்,திருப்பதி கார்டன் பகுதியிலும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு பிரகாஷ் அவர்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் வீ த லீடர் இயக்கத்தின் தன்னார்வலர்கள் ராயல் சரவணன் , சுப்பிரமணி,அண்ணாதுரை எனும் கௌசிகன் A.J. சரவணன்,சுபஸ்ரீ நிஷாந்த் வனத்துறை அலுவலர் அழகிரிசாமி உள்ளிட்ட பலர் ஆர்வமாக கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 16 மாவட்டங்களைச் சேர்ந்த 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன என்பது குறித்து மாநில அளவில் "யங் இந்தியன்ஸ் பார்லிமெண்ட் 2026" இரண்டு நாட்கள் மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.08.2026) துவக்கி வைத்தார். உடன் கரூர் பாராளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் கள்ளுக்கடை மேடு, பட்டக்கார வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் தொகை (2027 ) கணக்கெடுப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி நேற்று ( 2882026 ) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தவெக உறுப்பினர்கள் வலியுறுத்தல் தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் தமிழக வெற்றிக் கழக 51வது வார்டு மாமன்ற உறுப்பினர் சி.மந்திரமூர்த்தி மற்றும் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராமர் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். தூத்துக்குடியில் ரூ.90 கோடி செலவில் மல்டி லெவல் பேருந்து நிலையம் அமைக்கவும், மழைநீர் வடிகால் பணிகளுக்கு நிதி ஒதுக்கிய தமிழக அரசை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றவும் கோரிக்கை விடுத்தனர். மேலும், ஓட்டப்பிடாரம் தொகுதியில் புதிய ரேஷன் கடை திறப்பு குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தகவல் தெரிவிக்காமல் மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டதாகக் கூறி, மேயர் ஜெகன் பெரியசாமியிடம் கண்டனத்தையும் தெரிவித்தனர்.

## 'First responder' India leads global relief race after deadly flash floods in Nepal



*While several countries, including the US and China, have pledged support, India stands out for the speed of its aid delivery to Nepal.*

*At around 8:35pm on Wednesday, an Air Force C-130J aircraft took off from India carrying 10 tonnes of humanitarian and disaster relief assistance to Nepal, less than 12 hours after the ecologically fragile Himalayan nation was hit by a deadly flash flood. The first consignment reached Kathmandu that night.*

*The prompt response reinforces India's position as a "first responder", as New Delhi moved quickly to physically deliver relief to its Himalayan neighbour even as several other countries and international organisations, including China and the United States, were still mobilising assistance.*

*India's swift action also fits into a broader pattern of the country's growing humanitarian and disaster-relief efforts- from Covid-19 vaccines supplied to countries in Africa and elsewhere to relief and rescue operations in earthquake-hit Turkiye and Syria in 2023, disaster-hit Myanmar in 2024, cyclone-hit Sri Lanka in 2025, and earthquake-hit Venezuela in 2026, among others.*

*On Wednesday evening, Prime Minister Narendra Modi spoke to Nepal's Prime Minister Balendra Shah, conveyed his condolences, and said India was ready to provide all possible humanitarian assistance. He also said Indian teams were coordinating closely on rescue and relief efforts.*

*As the first aircraft was dispatched, foreign minister S Jaishankar said on X that India had sent 10 tonnes of humanitarian assistance, adding that "India stands with Nepal and its people".*

*Other global players have also pledged or begun providing assistance to Nepal.*

*China, which has historically competed with India for influence in Nepal, has coordinated emergency supplies and cash assistance, according to China's ambassador to Nepal. The formal mechanism for transferring the money and delivering physical supplies was still being worked out, according to local media.*

*South Korea, the United Kingdom, the European Union, the US, the United Nations, the World Health Organisation, and the World Bank have also offered or mobilised various forms of assistance. The US has committed $500,000 and a disaster-response adviser; the UK has pledged £5 million ($6.79 million) and emergency responders; and the World Bank has indicated it could provide up to 25 billion Nepalese rupees ($163.55 million) in emergency assistance.*

*But what stands out in India's response is the speed of its physical relief delivery. On Thursday, New Delhi sent a second consignment, including medicines and food packets, taking the total delivered by air to 47.5 tonnes. By Friday afternoon, India had sent a total of 62 tonnes of relief material.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.